


30.9.2024

தலைப்புச் செய்திகள்

1. காவிரி பிரச்சனையை அரசியலாக்க கூடாது என்று மத்திய எஃகு துறை அமைச்சர் திரு. H.D. குமாரசாமி கேட்டுக் கொண்டுள்ளார்

2. அனைவருக்கும் வளர்ச்சி தொடர்பான மக்கள் திட்ட இயக்க தேசிய பயிலரங்கை பஞ்சாயத்து ராஜ் இணையமைச்சர் திரு. எஸ்.பி.சிங் பாகேல் இன்று தொடங்கிவைத்தார்.

3. குற்றச்செயல்களில் ஈடுபட்ட 26 அமைப்புகளை மத்திய புலனாய்வு பிரிவு முடக்கியுள்ளது.

4. வானிலை முன்னெச்சரிக்கை தகவல்களை அறிந்து கொள்ள ஏதுவாக tn alert செயலி உருவாக்கப்பட்டு உள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

5. பங்களாதேஷிற்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் விக்கெட் இழப்பின்றி 55 ரன் எடுத்திருந்தது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖

H.D. குமாரசாமி

காவிரி விவகாரத்தை அரசியல் ஆக்கக் கூடாது என்று மத்திய கனரக தொழிற்சாலை மற்றும் எஃகு துறை அமைச்சர் திரு. H.D. குமாரசாமி தெரிவித்திருக்கிறார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், உரிய காலத்தில் மழை பெய்யும் போது காவிரி விவகாரத்தில் பிரச்சனை எதுவும் ஏற்படாது என்று குறிப்பிட்டார்.

எனவே விவசாயிகள் நிலைமையை புரிந்து கொண்டு உரிய தீர்வு ஏற்பட ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து செல்ல வேண்டுமென்று அறிவுறுத்தியுள்ளார்.

சேலம் உருக்காலைக்கு புத்துயிர் ஊட்டி வேலைவாய்ப்பை பெருக்கி, அதன் வளர்ச்சியை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

சேலம் உருக்காலை வளாகத்தில், மத்திய தொழில் பாதுகாப்பு படையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு மரக்கன்றுகளை நட்ட அமைச்சர் சேலம் உருக்காலையை ஆய்வுசெய்தார்.

அங்கு நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் உருக்காலையின் நிர்வாக அமைப்பு, உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் விற்பனை விவரங்களையும் அமைச்சர் கேட்டறிந்தார்.

❖❖❖❖❖❖❖❖

எஸ்.பி.சிங் பாஹேல்

அனைவருக்கும் வளர்ச்சி தொடர்பான மக்கள் திட்ட இயக்கம் குறித்த தேசிய பயிலரங்கை மத்திய பஞ்சாயத்ராஜ் இணையமைச்சர் பேராசிரியர். எஸ்.பி.சிங் பாஹேல் இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.

பல்துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றுள்ள, இக்கருத்தரங்கில் நடப்பு மற்றும் வரும் நிதியாண்டிற்கான, பஞ்சாயத்து மேம்பாட்டு திட்டங்களுக்கான தயாரிப்புகள் இடம்பெற்றுள்ளன.

பல்வேறு மாநிலங்களிலும், யூனியன் பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும், மக்கள் நலத்திட்டங்கள் குறித்து, இதில் பகிர உள்ளதால், புதிய வாய்ப்புகளுக்கான தளமாக இப்பணிப்பட்டறை திகழும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖

புலனாய்வு பிரிவு

உலகளாவிய சைபர் குற்றங்களை இலக்காக கொண்டு செயல்படும் 26 அமைப்புகளை மத்திய புலனாய்வு பிரிவு முடக்கியுள்ளது.

சி.பி.ஐ. அமைப்பு 32 இடங்களில் மேற்கொண்ட ஒருங்கிணைந்த சைபர் தொழில்நுட்ப ஆய்வுகளின் அடிப்படையில் இந்நடவடிக்கை.

ஹைதராபாத், புனே, விசாகபட்டினத்தை தலைமையிடமாக கொண்டு செயல்பட்ட இந்த அமைப்புகளிடமிருந்து மின்னணு சாதனங்கள், கைபேசிகள், மடிகணினிகள், நிதிசார் தகவல்கள், தொலைத்தொடர்பு ஆவணங்கள், விலை உயர்ந்த வாகனங்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

அமெரிக்க குடிமக்களை இலக்காக கொண்டு இந்த அமைப்புகள் செயல்பட்டதாக சி.பி.ஐ. தெரிவித்துள்ளது.

3-வது கட்ட ஆப்ரேஷன் சக்ரா நடவடிக்கையின் கீழ் இண்டர்போல் மற்றும் வெளிநாட்டு சட்ட அமலாக்க முகமைகளின் உதவியுடன் முறைகேடுகளில் ஈடுபடும் இத்தகைய அமைப்புகள் கண்டறியப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாக சி.பி.ஐ. மேலும் கூறியுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

இந்தியாவில் தயாரிப்போம்

இந்தியாவில் தயாரிப்போம் இயக்கத்தை மேலும் வலுப்படுத்த வர்த்தக சீர்த்திருத்த செயல்திட்டம் 2024 கொண்டுவரப்படும் என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம் இலகுவான வர்த்தக நடைமுறைகள் மேலும் எளிதாக்கப்பட்டு, வர்த்தக ஒழுங்குமுறை செயல்திட்டம் வகுக்கப்படும் என்று அமைச்சகம் கூறியுள்ளது.

சீர்த்திருத்த நடவடிக்கைகளால் சங்கிலி விநியோகம் முறைப்படுத்தப்பட்டு, பணிச்சுமைகள் குறைக்கப்பட்டு, மின்னணு தீர்வுகள் மூலம் இந்தியாவில் தயாரிப்போம் திட்டம், உலகளாவிய முதலீட்டு மையமாக உருவெடுக்கும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

நாட்டின் வர்த்தக கட்டமைப்புகளில் மாற்றங்களை கொண்டு வருவதற்காக 2014 - 15-ம் ஆண்டுகளில் வர்த்தக சீர்த்திருத்த செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖

ஜமைக்கா

ஜமைக்கா பிரதமர் டாக்டர் ஆன்ட்ரூ ஹோல்னஸ் 4 நாள் அரசு முறை பயணமாக இன்று இந்தியா வந்துள்ளார்.

மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு. பங்கஜ் சவுத்ரி புதுதில்லி விமான நிலையத்தில் அவரை அன்புடன் வரவேற்றார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியை நாளை, டாக்டர் ஹோல்னஸ் சந்தித்து, இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து விரிவான பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

குடியரசு தலைவர், குடியரசு துணைத்தலைவர் ஆகியோரை சந்திக்கும் டாக்டர் ஹோல்னஸ், தொழில் வர்த்தக பிரிவு தலைவர்களுடனும் முதலீடுகள் தொடர்பான ஆலோசனைகளை மேற்கொள்கிறார்.

பல்வேறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் இதில் கையெழுத்தாக உள்ளன.

❖❖❖❖❖❖❖❖

தேர்தல்

ஜம்மு காஷ்மீரில் 7 மாவட்டங்களின் 40 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு நாளை நடைபெறும் 3-வது இறுதி கட்ட வாக்குப்பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளும் தயார் நிலையில் உள்ளன.

415 வேட்பாளர்களின் வெற்றி தோல்வியை 39 லட்சம் வாக்காளர்கள் நிர்ணயிக்கின்றனர்.

இதனிடையே ஹரியானாவில் வரும் 5-ம் தேதி 90 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக நடைபெறும் வாக்குப்பதிவிற்கான பிரச்சாரம் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இந்த தேர்தலுக்கான வாக்கு எண்ணிக்கை வரும் 8-ம் தேதி நடைபெறும்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தில் வானிலை முன்னெச்சரிக்கை மற்றும் தகவல்களை அறிந்து கொள்ள ஏதுவாக tn alert செயலி உருவாக்கப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் இன்று பேசியஅவர், அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டுமென்று அறிவுறுத்தினார்.

.. வாய்ஸ் ..

வெள்ள பாதிப்புக்குள்ளான மக்களுக்கு நிவராண உதவிகள் உடனடியாக வழங்கப்பட வேண்டுமென்றும், முன்னேற்பாட்டு பணிகளை விரைந்து முடித்திடவும் அறிவுறுத்தினார்.

மாநிலத்தில் பேரிடரை எதிர்கொள்ள தேவையான உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டு உள்ளதாக கூறிய முதலமைச்சர், நோய் தொற்றை தடுக்க துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றார்.

பேரிடர் காலங்களின் போது மாவட்ட நிர்வாகம் தன்னார்வலர்களோடு இணைந்து பணியாற்ற வேண்டுமென்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் - ரத்ததானம்

தேசிய தன்னார்வ ரத்ததான தினம் நாளை கொண்டாடப்படுகிறது.

ரத்த கொடையின் 20ம் ஆண்டு கொண்டாட்டம் ரத்த கொடையாளர்கள் அனைவருக்கும் நன்றி என்பதே இந்தாண்டின் கருப்பொருளாகும்.

இந்நாளையொட்டி முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில், பொதுமக்களின் உயிர்காக்கும் சேவையில் நாம் அனைவரும் பங்கெடுக்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

ஆண்டுதோறும் ரத்த கொடையாளர்கள் மற்றும் ரத்த முகாம் அமைப்பாளர்களுக்கு பாராட்டு சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கப்பட்டு வருவதாக கூறிய முதலமைச்சர், கடந்த ஆண்டு அரசு ரத்த மையங்கள் மூலம் இலக்கை தாண்டி, 102 விழுக்காடு ரத்தம் சேகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

ரத்ததானத்தின் முக்கியத்துவத்தை பொதுமக்கள் அறிந்திடும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள், முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாகவும் முதலமைச்சர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

செயற்கைக்கோள்

சென்னை CIT பொறியியல் கல்லூரி மாணாக்கர் யு லாக் 3 என்ற சிறிய ரக செயற்கைக்கோளை, திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு மைதானத்திலிருந்து இன்று விண்ணில் செலுத்தி சாதனை படைத்துள்ளனர்.

திரு.மிதுன் தலைமையிலான, செயற்கைக்கோள் வடிவமைப்புக்குழு, கடந்த 4 ஆண்டுகளாக இதனை வடிவமைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

நவராத்திரி விழா

திருவனந்தபுரத்தில் நடைபெறவுள்ள நவராத்திரி விழாவிற்கான சாமி சிலைகள், மன்னர் கால பாரம்பரிய முறைப்படி கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து ஊர்வலமாக புறப்படும் நிகழ்வு இன்று கோலாகலமாக தொடங்கியது.

முதல்கட்டமாக சுசீந்திரத்திலிருந்து "முன்னுதித்த நங்கையம்மன்" சிலை பாதுகாப்பாக ஊர்வலத்தில் புறப்பட்டது.

மத்திய அமைச்சர் திரு. சுரேஷ் கோபி உட்பட ஏராளமானோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖

இருவரி

அரியலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில், வரும் 5ம் தேதி நடைபெற உள்ள வேலைவாய்ப்பு முகாம் விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை ஆட்சித்தலைவர் திரு.ரத்தினசாமி இன்று தொடங்கிவைத்தார்.

தர்மபுரியில் வரும் 4-ம் தேதி தொடங்கும் 10 நாள் புத்தகத் திருவிழா தொடர்பான விழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. சாந்தி இன்று தொடங்கிவைத்தார்.

நாமக்கல் மாவட்டத்தில் வரும் 2-ம் தேதி காந்திஜெயந்தி தினத்தை முன்னிட்டு மதுபான கடைகள் மூடப்பட்டிருக்கும் என்று ஆட்சித்தலைவர் டாக்டர் உமா அறிவித்துள்ளார்.

மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்துள்ளார்.

பெரம்பலூர் மாவட்டம் சத்திரமலை கிராமத்தில் மக்கள் தொடர்பு திட்டமுகாம் வரும் 9-ம் தேதி நடைபெறவுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு. கிரேஸ் பச்சாவ் அறிவித்துள்ளார்.

காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்கனமழை காரணமாக ஒகேனக்கல்லில் நீர்வரத்து 13 ஆயிரம் கனஅடியாக இன்று அதிகரித்துள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அகவை முதிர்ந்த தமிழறிஞர்கள் உதவித்தொகை பெற அடுத்தமாதம் 31-ம் தேதிக்குள் தமிழ்வளர்ச்சி துணை இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு. மா. பிரதீப்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

பணி ஓய்வு

மதுரை ஆகாஷ்வாணியில் பொறியியல் பிரிவின் உதவி இயக்குநராக பணியாற்றும் திரு. ஜி.வாசுதேவன் இன்று பணி ஓய்வு பெறுகிறார்.

பல்வேறு நிலையங்களில் 34 ஆண்டுகளாக அவர் பணியாற்றியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

கிரிக்கெட்

கான்பூரில் பங்களாதேஷிற்கு எதிரான 2-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4-ம் நாளான இன்று இந்தியா தனது முதல் இன்னிங்சில் சற்றுமுன் 1 விக்கெட் இழப்பிற்கு 66 ரன் எடுத்திருந்தது.

முன்னதாக பங்களாதேஷ் தனது முதல் இன்னிங்சில் 233 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.